**EP.No.4/2024**

Date : 28.01.2026.

ம.சா.1 : சுப்பிரமணியன்

<u>ம.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் எவ்வளவு காலமாக மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றால் 13 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். வாகன கடன் எவ்வளவு என்கிற விவரமோ, 1ம் மனுதாரர் எவ்வளவு செலுத்தினார் என்ற விவரமோ மனுவிலும் மற்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும் துலங்காது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வாகனத்தை எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது என்றம் எவ்வளவு தொகைக்கு ஏலம் விடப்பட்டது என்ற விவரமும் மனுவிலோ நிரூபண வாக்குமூலத்திலோ துலங்காது என்றால் சரியல்ல. மனுவில் எந்த ஆவணத்தையும் நான் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் எந்த காலத்திலும் 2ம் எதிர்மனுதாரர் உத்திரவாதம் அளிப்பவர் என்ற நிலையில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு உரிய அறிவிப்பு அனுப்பாமலேயே Award பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளதில் எந்த அறிவிப்பு மற்றும் ஒப்புதல் அட்டையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ச ரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள் இந்த மனுவிற்கு அவசியத்தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காலம் சென்ற நிலையில் அவருடைய வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதார் எங்கள் நிறுவனத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கா உத்திரவாதம் அளிக்காத நிலையில் மனுவில் கண்ட தொகையை செலுத்தக்கடமை பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மனுவோடு Award தாக்கல் செய்திருந்தாலும் அது குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் மனுதாரரின் செலவு தொகையோடு இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.